

968

# நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு

## நெல்லை நகர் நூலகம்

# * பொன் விழா மலர் *

# TVS

Serve you

By

Serving

The Transport Operator

Tò give you

Efficient

Low-Cost

Transport



சி. என். அண்ணதுரை,

முதலமைச்சர்.

# தமிழக அரசு அமைச்சர்கள்



மாண்புமிகு
**இரா. நெடுஞ்செழியன்,**
கல்வி, தொழில் அமைச்சர்.



மாண்புமிகு
**மு. கருணாநிதி,**
பொதுப் பணித்துறை அமைச்சர்



மாண்புமிகு
**கே. ஏ. மதியழகன்,**
வருவாய்த்துறை, உணவு அமைச்சர்.



மாண்புமிகு
**செ. மாதவன்,**
சட்டம், கூட்டுறவுத்துறை அமைச்சர்.

CONNEMARA PUBLIC LIBRARY
22 OCT 1968
MADRAS

# தமிழக அரசு அமைச்சர்கள்



மாண்புமிகு
**மா. முத்துசாமி,**
உள்ளாட்சித்துறை அமைச்சர்.



மாண்புமிகு
**எஸ். ஜே. சாதிக்பாஷா,**
மருத்துவத்துறை அமைச்சர்.



மாண்புமிகு
**ஏ. கோவிந்தசாமி,**
விவசாய அமைச்சர்.



மாண்புமிகு
**டாக்டர் சத்தியவாணிமுத்து,**
அரிசனநல, செய்தித்துறை அமைச்சர்.



நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அமரர்
ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை M. A., M. L. A., அவர்களுக்கு
பொன்விழா மலர் சமர்ப்பணம்.

மக்கள் தலைவர் அமரர்

# உயர்திரு ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை

நெல்லை மாவட்டத்தில் செல்வமும் செல்வாக்கும் மிக்கதோர் குடும்பத்தில் உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் 1910-ம் ஆண்டு பிறந்தார்கள். தந்தையின் பெயர் உயர்திரு. அகிலாண்டம் பிள்ளை. நெல்லை இந்துக் கல்லூரியில் படித்து B. A. பட்டமும் சென்னை பிரசிடென்சி கல்லூரியில் படித்து M. A. பட்டமும் பெற்றார்கள். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் உயர்திரு. ஈஸ்வரன் பிள்ளை அவர்களின் குமாரியை மணந்தார்கள். அவர்களுக்கு இரு மகன்களும், இரு மகள்களும் உள்ளனர்.

நெல்லை மாவட்டத்தில் உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் கூட்டுறவு இல்லாத பொது நிறுவனங்களே இல்லையெனக் கூறுமளவு பொதுப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். 1957 முதல் 1966 வரை நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு நூலகத் துறைக்கு அரும்பெரும் பணியாற்றியுள்ளார்கள். இவர்களுடைய பணி காலத்தில் சுமார் 70 நூலகங்கள் திறக்கப்பட்டன. நெல்லை இந்துக் கல்லூரி நிர்வாகக் குழுச் செயலாளராகவும், திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான தர்மகர்த்தாக்கள் குழுத் தலைவராகவும், குற்றாலம் ரோட்டரி சங்கத் தலைவராகவும், மதுரை பாங்க் இயக்குநராகவும், இலஞ்சி ராமசாமி பிள்ளை உயர்நிலைப்பள்ளி, ஈசுவரன் பிள்ளை துவக்கப்பள்ளி ஆகியவற்றின் நிர்வாகியாகவும், தென்காசி கூட்டுறவு நில அடமான பாங்க் தலைவராகவும், தென்காசி திருவள்ளுவர் கழகத் தலைவராகவும், தமிழக மாநில நூலகக் குழு உறுப்பினராகவும், தமிழக அருள் நெறித் திருக்கூட்டத் தலைவராகவும், நெல்லை நகர் பொது நூலகப் பொன்விழாக் குழுத் தலைவராகவும், தமிழக மேல்சபைத் தலைவராகவும், தென்காசித் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற குழுத் தலைவராகவும் உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் நீண்டகாலம் அரும்பெரும் பணியாற்றியுள்ளார்கள்.

உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் உதவியாலும், ஒத்துழைப்பாலும், மறுமலர்ச்சியடைந்த பொது நிறுவனங்களும், நிறைவேறிய பொதுப் பணிகளும், திருப்பணிகளும், பயனடைந்த மக்களும், பல்லாயிரம். உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பண்பின் சிகரமாய், அன்பின் இருப்பிடமாய், அறிவின்

கருவூலமாகத் திகழ்ந்தார்கள். அவர்களின் அன்பிலும், பண்பிலும் தங்களின் மனதை பறி கொடுக்காதவர்கள் யாருமில்லை. ஏழை மக்களிடம் அன்புடனும், பண்புடனும் பழகி, அவர்களின் துன்பங்களையும் துயர்களையும், தன்னால் முடிந்த அளவு போக்கினார்கள். உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் இல்லம் சென்று உணவு அருந்தாமல் திரும்பியவர்கள் யாருமில்லை. பொது நிறுவனங்களுக்கும், பொதுப் பணிகளுக்கும், திருப்பணிகளுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் அவர்கள் வாரி வழங்கிய தொகை பல லட்சம். தமிழ் நாட்டில் வள்ளல் தன்மை காரணமாக இலஞ்சி வள்ளல் என்று சிறப்புப் பெயரைப் பெற்றார்கள். தமிழ் நாட்டில் ஜாதி மத பாகுபாடு இன்றியும், கட்சி பாகுபாடு இன்றியும், மதிப்புடனும், மரியாதையுடனும் எல்லோராலும் போற்றப்பட்ட மக்கள் தலைவர் உயர்திரு. ஐ. ஏ. சிதமபரம் பிள்ளை அவர்கள்தான். உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் பணியால் பயனடைய இருந்த பொது நிறுவனங்களும், பொதுப் பணிகளும், திருப் பணிகளும் பல பல. ஆனால் இறைவன் அந்த வாய்ப்பை நமக்கு, இந்த நாட்டிற்கு அளிக்கவில்லை. உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் 6—12—67 காலை யாரும் எதிர்பாராத வண்ணம் மறைந்தார்கள். அவர்கள் மறைவால் தமிழகம் அதிர்ச்சிக்கும் தீராத் துயரத்திற்கும் உள்ளாகியது. தமிழக வரலாற்றில், மக்கள் உள்ளங்களில் உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் பணியும், அன்பும், பண்பும் நிறைந்த உருவமும் புன்முறுவல் பூத்த முகமும் என்றும் மறையாது.

நெல்லை நகர் பொது நூலகப் பொன்விழாக்குழுத் தலைவராகப் பணியாற்றிய எங்கள் தலைவர் மறைந்த மாவீரர், மக்கள் தலைவர் அமரர் உயர்திரு. ஐ ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்களுக்கு இப் பொன்விழா மலரை எங்களின் அன்புக் காணிக்கையாக சமர்ப்பிக்கிறோம்.

நெல்லை
12—3—68.

**நெல்லை நகர் பொது நூலக**
**பொன்விழாக் குழுவினர்.**

CONNEMARA PUBLIC LIBRARY
22 OCT 1968
MADRAS



உயர்திரு. M. D. பால் M. A., M. Sc., Ed. D. (Col.)
மாநிலக் கல்வி & பொது நூலக இயக்குநர்.

22 OCT 1968



உயர்திரு. A. P. C. வீரபாகு B. A., அவர்கள்
தலைவர்
( நெல்லை மாவட்ட நூலகத் தந்தை )

CONNEMARA PUBLIC LIBRARY
22 OCT 1968



**திரு. பொ. ஆல்பிரட், பி. ஏ., எல். டி.,**
செயலாளர்,
நூலக ஆணைக்குழு & நடு நெல்லை மாவட்டக் கல்வி அதிகாரி,
திருநெல்வேலி.

CONNEMARA PUBLIC LIBRARY
22 OCT 196[illegible]



உயர்திரு. **S. கல்யாணசுந்தரம் பிள்ளை**

செயலாளர் :-

பொன்விழாக் குழு, நெல்லை நகர் பொது நூலகம்

( உரிமையாளர்:- சென்ட்ரல் டாக்கீஸ் & S. K. பிக்சர்ஸ் )



நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு உறுப்பினர்கள்.

நெல்லை நகர் நூலகத்தில் புதிய தலைவர்
**உயர்திரு. A. P. C. வீரபாகு அவர்களுக்கு**
நடந்த வரவேற்பு விழாவில் முன்னாள் தலைவர்
**உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்**
தலைமையுரையாற்றுகிறார்கள்.

PUBLIC LIB
22 OCT 1968





வரவேற்பிற்கு நன்றி தெரிவித்து தலைவர்
**உயர்திரு. A. P. C. வீரபாகு B. A., அவர்கள்**
பேசுகிறார்கள்.



பெருமாள்புரம் பெண்கள் நூலகம் திறப்பு விழா



உயர்திரு. A. P. C. வீரபாகு B. A., அவர்கள்
நூலக ஆணைக்குழுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட சமயம்
நடைபெற்ற நூலக ஆணைக்குழுக் கூட்டம்.



பாளையங்கோட்டை குழந்தைகள் நூலகத்தை திறந்து வைத்து
முன்னாள் தலைவர்
உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்
உரையாற்றுகிறார்கள்.

CONNEMARA PUBLIC LIBRARY
22 OCT 1968
MADRAS



நெல்லை நகர் பொது நூலகத்தில் நூலக ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர்

**உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்களுக்கு**

நடந்த பாராட்டு விழா.



புத்தக அலமாரியிலிருந்து வாசகர்கள் புத்தகம் எடுக்கும் காட்சி



உயர்திரு. **M.** முத்துவேலு
B. A., B T.,
நூலக மேற்பார்வையாளர்.



உயர்திரு. **M.** பரமேஸ்வரன் பிள்ளை
B. A., L. T.,
முன்னாள் செயலாளர் & நடுநெல்லை மாவட்டக் கல்வி அதிகாரி. (11—4—66 முதல் 17—4—67 வரை)



உயர்திரு. **S.** நல்லகண்ணு B. A, B. T.,
முன்னாள் செயலாளர். (பொறுப்பு) (8 - 11 - 65 முதல் 11 – 4 —66 வரை)



உயர்திரு. S. பேரின்பமுத்து B. A., M. Ed.,
செயலாளர்: நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு
நடுநெல்லை மாவட்டக் கல்வி அதிகாரி.



★★

அமரர்

அ. க. நவநீதகிருஷ்ண பிள்ளை
அவர்கள்

( பொன்விழாக் குழு உறுப்பினர் )

★★



நெல்லை நகர் நூலக நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் நூலகப் பணியாளர்களுடன்
( வெள்ளிக் கேடயம் பரிசு பெற்ற விழாவின் சமயம் )

## நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு

### நெல்லை நகர் பொது நூலகம்



| திரு. | திரு. | திரு. | திரு. |
|---|---|---|---|
| **D.** வெங்கடாசலம், | **L.** சுப்பிரமணியம், | **N.** வடிவழகியநம்பி, | **S.** அருணாசலம். |
| நூலகர். | ஊழியர். | உதவியாளர். | உதவியாளர். |



நெல்லை நகர் பொது நூலகப் புதுக் கட்டிடமும் பழைய கட்டிடமும்.



நெல்லை நகர் பொது நூலகப் புதுக்கட்டிடத்தின் முன் பக்கத் தோற்றம்.



உறுப்பினர் ஒருவர் புத்தகப் பட்டியலை
பார்க்கும் காட்சி



நெல்லை நகர் பொது நூலகத்தில் நூல்கள் படித்துக்
கொண்டிருக்கும் மக்கள் பகுதியில் ஒரு காட்சி



நெல்லை நகர் பொது நூலகப் புது கட்டிடத்தின்
உட்புறத்தோற்றம்-வாசகர்களுடன்







சுவாமி நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் கோபுரத் தோற்றமும் பொற்றாமரைக் குளமும்



நெல்லை மாவட்ட மத்திய நூலகக் கட்டிடம்

பாளையங்கோட்டை.

★

மேலப்பாளையம் நாகூர் ஆண்டவர் என்ற

காதரொலியா தர்கா

★



தர்கா இனும்தார்,

P. M. பீர்சாகிப்,

158, லெக்ஷிமிபுரம் தெரு, :: மேலப்பாளையம்.



பாளையங்கோட்டை அத்தியக்ஷய ஆலயம்

SECRETARY TO THE PRESIDENT
OF INDIA,
Rashtrapati Bhavan,
NEW DELHI-4.

No. F. 3-M/67.

November 2, 1967.

Dear Sir,

The President is glad to learn from your letter of October 25, 1967, that the Golden Jubilee of the Local Library Authority, Tirunelveli Town Public Library, will be held in December 1967. He sends his best wishes on the occasion.

Yours faithfully,

*Nagendra Singh.*

VICE-PRESIDENT
INDIA.

New Delhi
November 2, 1967.

Dear Sir,

Thank you for your letter of the 25th October.

I send my best wishes for the success of the Golden Jubilee Celebrations of the Local Library Authority.

Yours faithfully,

V. V. Giri.

सत्यमेव जयते

PRIME MINISTER'S SECRETARIAT
**NEW DELHI-11.**

N. 9. (3)/66 PMP.

December 28, 1966.

Dear Sir,

The Prime Minister is glad to know that the Public Library of Tirunelveli is completing fifty years of service next month. She sends her best wishes for the success of the Golden Jubilee celebrations you have planned.

Yours faithfully,

**H. Y. SHARADA PRASAD**
Deputy Information Adviser to the Prime Minister.

சி. என். அண்ணாதுரை.
முதலமைச்சர்.

கோட்டை,
சென்னை-9.
9—8—1967.

நெல்லை நகர் பொது நூலகத்தின் பொன்விழா நிகழ்ச்சிகள் நல்ல முறையில் நடைபெறவும் அதனையொட்டி வெளிவரும் மலர் சிறந்த முறையில் அமையவும் என் நல் வாழ்த்துக்கள்.

சி. என். அண்ணாதுரை.

இரா. நெடுஞ்செழியன்,
கல்வி-தொழில் அமைச்சர்.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9.
ஆகஸ்டு 26, 1967.

மக்களுக்கு அறிவு ஊற்றாகவும், விளக்காகவும் நூலகங்கள் பயன்பட்டு, வாழ்க்கையை உயர்த்த உதவுகின்றன. 'கற்றனைத் தூறும் அறிவு' என்பது வள்ளுவர் வாய்மொழி. மக்களிடையே நல்ல நூல்களைப் பரப்பவும், அவற்றைப் படிக்கின்ற ஆர்வத்தை எழுப்பவும் மேற்கொள்ளப் படுகின்ற முயற்சியெதுவும் பாராட்டி வரவேற்கத் தக்கதாகும்.

நெல்லை நகர் பொது நூலகப் பொன் விழா அண்மையில் நடைபெறவிருப்பதையும், பொன் விழாக் கட்டிடம் திறக்கப்பட இருப்பதையும் அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். விழா இனிது நடந்தேற எனது நல் வாழ்த்துக்கள்.

இரா. நெடுஞ்செழியன்.

**மு. கருணாநிதி,**
பொதுப்பணி அமைச்சர்.

தமிழக அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-9.
22—9—1967.

அறிவு வளர்ச்சிக்குச் சிறந்த சாதனம் நூலகங்கள். நெல்லை நகர் நூலகம் நல்ல முறையில் வளர்ந்து தற்போது பொன்விழாக் கொண்டாடுவது குறித்து பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

விழா சிறப்பாக நடைபெறவும், மலர் வெளியீட்டு முயற்சிக்கும் என் மனமார்ந்த நல் வாழ்த்துக்கள்.

அன்புள்ள,
மு. கருணாநிதி.

S. MADHAVAN,
MINISTER FOR
LAW AND CO-OPERATION.

FORT ST. GEORGE,
MADRAS-9.
1—8—67

ஊரெங்கும் பள்ளி இருப்பது போலவே நூலகமும் இன்றியமையாத தேவை. காலத் தேவைக்கு ஏற்ற அரிய நூல்களை நூலகங்களில் வைத்தால்தான், மக்கள் தாங்கள் பெற்ற கல்வி யின் முழுப் பயனையும் அடைய முடியும். நெல்லை நகர் பொது நூலகப் பொன்விழாவையொட்டி, பொன் விழாக் கட்டடம் கட்டி, திறப்பு விழா நடத்தப்படுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி யடைகிறேன்.

மக்களின் கருத்தை ஈர்க்கும் முறையில் பொன்விழா இனிது நிறைவேறவும், நூலகம் மேலும் மேலும் வளரவும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

செ. மாதவன்

**டாக்டர் சத்தியவாணி முத்து**
அரிசன நல, செய்தித்துறை
அமைச்சர்.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை-9.
16—8—1967.

அறிவு வளர்ச்சிக்கும் கல்வி மேம்பாட்டுக்கும் சிறந்த துணையாக விளங்குபவை நூலகங்கள். நெல்லை நகர் பொது நூலகம் பொன்விழா கொண்டாடும் அளவில் வளர்ச்சி பெற்று, பொன்விழாக் கட்டிடமும் கட்டி முடித்திருப்பதை அறிய மகிழ்ச்சியடைகிறேன். இச் சிறந்த பணி மேலும் வளரவும், இனிது நிறைவேறவும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

சத்தியவாணி முத்து

டாக்டர் ம. தே. பால்,
மாநில நூலக இயக்குநர்.

சென்னை-6.

நாள். 7—8—67.

திருநெல்வேலி மாவட்ட நூலக ஆணைக்குழுவினர் ஆற்றிவரும் நூலகப் பணிக்கு எனது பாராட்டுதல்கள். தங்கள் மாவட்டத்தில் இன்று ஒரு தலைமை நூலகம், 101 கிளை நூலகங்கள், 34 நூல்வழங்கு நிலையங்கள் மூலம் நூலகப் பணியாற்றி வருகிறீர்கள்.

நம் நாட்டில் குடியாட்சி சிறப்புற்று ஓங்க கல்வி வளர்ச்சி இன்றியமையாததாகும். மக்கள் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டால் மட்டும் போதாது. கற்ற கல்வி மங்காதிருக்க மேலும், மேலும் தொடர்ந்து படிக்க வேண்டும். தொடர்ந்து படிக்க ஏற்ற நூல்கள் தேவை. இத்தேவையைப் பூர்த்தி செய்வதே நூலகங்களின் பணியாகும். ஊரெங்கிலும் நூலகங்களைத் தோற்றுவித்து மக்களின் அறிவை வளரச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தமிழ்நாட்டில் பொது நூலக இயக்கம் தோன்றியது. நூலகப்பணியில் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்குகிறது தமிழகம்.

தங்கள் மாவட்டத்தில் நூலகப் பணி இன்னும் சிறந்த முறையில் வளர்ச்சியடையவும் மக்களுக்கு நூலகத் தொண்டின் பயன் பரவவும், மாவட்ட நூலக ஆணைக்குழு பணியாற்றும் என்று நம்புகிறேன். எனது இதயம் நிறைந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

**ம. தே. பால்.**

# MADURAI UNIVERSITY

Prof. T. P. Meenakshisundaran.
Vice-Chancellor.

UNIVERSITY BUILDINGS,
MADURAI-2.

*No. 534/v*

16th Dec. 1966.

## MESSAGE.

Prof. T. P. Meenakshisundaran, Vice-Chancellor, Madurai University is indeed happy to learn that the Tirunelveli Local Library Authority Public Library is going to celebrate its Golden Jubilee in the month of January, 1967. He wishes the celebrations every success.

Mr. Justice
K. VEERASWAMI.

December 22,
1966.

I am glad to note that the Golden Jubilee of the Tirunelveli Local Library Authority Public Library, Tirunelveli Town will be celebrated in the last week of January 1967. It is a good augury that on the occasion a new building will be opened. Let me congratulate the concerned authorities on the successful work they have done and wish the Public Library a brighter future.

*Yours sincerely,*

*K. Veeraswami.*

T. S. Avinashilingam,
Sri Ramakrishna Mission Vidyala P. O.
Coimbatore Dt.

December 26, 1966.

I am happy to learn that the Golden Jubilee of the Tirunelveli Town L. L. A. Public Library is being celebrated shortly. Libraries have a great part to play in disseminating knowledge and information to the people around.

I have pleasure in sending my best wishes and prayers for the success of the function and the Tirunelveli Town Library a long era of useful service.

*Yours sincerely,*

T. S. Avinashilingam.

M. M. Rajendran, I.A.S.,
Collector of Tirunelveli.

TIRUNELVELI,
Dated 2nd January 1967

I am very happy to know that you will be celebrating the Golden Jubilee of the Tirunelveli Local Library Authority Public Library. Libraries have a great role to play in educating the public and keeping them abreast of current trends of thinking and propagating knowledge. I do hope that your library will continue to lend useful service to the public and grow in stature day by day.

I wish the function all success.

Yours sincerely,

M. M. Rajendran.

OFFICE OF THE
BRITISH DEPUTY HIGH COMMISSIONER
IN SOUTHERN INDIA
INFORMATION SECTION

150-a, Mount Road,
Madras-2

23 January, 1967

The British High Commissioner has asked me to send you his best wishes on the occasion of the Golden Jubilee of the Tirunelveli Local Library Authority Public Library. He wishes you many more years of useful service to the public.

Yours faithfully,

C. K. Woodfield

Second Secretary
(Information)

**K. Venkatasubramanian, M. A., B. T.,**
Divisional Inspector of Schools,
Coimbatore division.

COIMBATORE,
24-12-1966.

I am extremely happy to know that the Local Library Authority, Tirunelveli is celebrating its Golden Jubilee in the last week of January 1967.

Tirunelveli district has stood first in many things and it has always been leading especially in the field of Education. In the sphere of Library movement also the L. L. A. Tirunelveli has done remarkable things of which all the public of Tirunelveli could feel proud. The L. L. A. had a series of illustrious Chairmen who gave strength to this movement and it is no wonder that to-day the L. L A. Tirunelveli occupies the foremost place in the state of Madras in the Library movement.

I wish your function all success.

Yours sincerely,
*K. Venkatasubramanian.*

SRI K. GOPALAN, M. A., M. Sc., B. T.,
Divisional Inspector of Schools,
Madurai Division.

MADURAI-2,

25—12—66.

I am glad to know that the Local Library Authority, Tirunelveli is celebrating its Golden Jubilee in the last week of January '67. It is needless for me to say that if the Local Library Authority has been doing good service during the past 50 years in the library movement, the credit goes to the sincere efforts of the past and present Chairmen and other members of the Local Library Authority who had evinced great interest in the improvement of the Library Movement in Tirunelveli District. The celebration of the Golden Jubilee is a fitting recognition of the valuable services rendered by the Local Library Authority, Tirunelveli. I wish the function all success.

With regards,

Yours sincerely,

*K. Gopalan.*

**எம். பரமேஸ்வரன் பிள்ளை,**
பி. ஏ., எல். டி.,
தனி மாவட்டக் கல்வி அலுவலர்,

திருச்சிராப்பள்ளி,
தேதி: 27—11—67.

நெல்லை நகர், பொது நூலகப் பொன்விழாவும், பொன்விழா மலர் வெளியீட்டு விழாவும் விரைவில் நடைபெற இருக்கின்றன என்ற செய்தி கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன். இரண்டு விழாக்களும் இனிது நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். கற்றவர்கள் நிறைந்த நெல்லை மாநகரிலும், மாவட்டத்திலுமுள்ள நூலகங்கள் பல தாங்கள் காட்டும் வழியில் சென்று அவரவர் தம் நூலகங்களின் பொன்விழாக்கள் நடத்துவதோடு, சிறப்புமிக்க மலர்கள் பல வெளியிட்டு மகிழ்வார்கள் என்று நம்புகிறேன்.

**வாழ்க நும் சீரிய பணி.**

அன்பன்,

**ம. பரமேசுவரன்**

# ஸ்ரீ ஸ்ரீ சிரிங்கேரி ஜகத்குரு மஹா சமஸ்தானம்,
# சிரிங்கேரி மடம், சாரதா பீடம்,

சிரிங்கேரி P. O., காடூர்.
(மைசூர் மாநிலம்)

**Y. M. கிருஷ்ணமூர்த்தி, பி. எஸ்சி.**
ஜகத்குரு அவர்களின் தனிச் செயலாளர்.

தங்கல் — புது டில்லி-16.
29—12—1966.

குறிப்பு எண்: 6120, 66/67.

## விஞ்ஞாபனம்

தங்கள் காரியதரிசி எழுதிய கடிதமும் நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு நெல்லை நகரப் பொது நூலகத்தின் பொன்விழா புதிய கட்டிடத் திறப்புவிழா பத்திரிகையும் கிடைத்தது. மகாசந்நிதானத்தில் சமர்ப்பிவிக்கப்பட்டது.

மகாசந்நிதானம் ஷெ நூலகம் பல ஏழைப் பொது மக்களுக்கு மிகவும் உபகாரமாக 50 வருடங்களாய் உபயோகப்பட்டு வருவதை அபிவிருத்தி செய்ய புதுக்கட்டிடமும் கட்டி. அதன் திறப்பு விழா கொண்டாட உத்தேசித்திருப்பது மிகவும் கொண்டாடத்தக்க காரியம். ஷெ விழா சிறப்பாய் நடக்கவேண்டுமெனவும் ஷெ நூலகம் இன்னும் அநேக மக்களுக்கு உபகாரமாக யிருக்க வேண்டுமெனவும் ஆசீர்வதித்து அருளிய மந்தராக்ஷதை ஸ்ரீ சாரதா சந்திரமௌளீஸ்வரர் பிரசாதம் இத்துடன் அனுப்பியிருக்கிறது.

**திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்களுக்கு,**
தலைவர், திருநெல்வேலி நகர் நூலக
பொன்விழாக் குழு,
திருநெல்வேலி நகர்.

இப்படிக்கு,
Y. M. கிருஷ்ணமூர்த்தி.

# UNIVERSITY OF MADRAS

UNIVERSITY BUILDINGS,
CHEPAUK,
**MADRAS - 5.**

**A. Thirumalaimuthuswamy**
M. A., M. Litt., B. T., D. Lib.
Department of Library Science.

Dated 22—12—'66

I thank you for your letter of the 15th instant. I am glad to learn that the new building of the Branch Library, Tirunelveli Town, the oldest as well as the foremost Branch Library of the Local Library Authority, Tirunelveli, has been completed and is to be opened shortly in connection with the Golden Jubilee Celeberation of the Branch Library, Tirunelveli Town.

I would like to congratulate the Chairman, the Secretary, and the Members of the Local Library Authority, Tirunelveli, and the elite of the town for having put up a grand building for housing the Branch Library, Tirunelveli Town. I am sure this library with its new building will cater to the needs of more and more readers.

Please accept my best wishes for the success of the function.

*Yours sincerely,*

A. Thirumalaimuthuswamy

வ. அழகப்பன்,
தலைவர்
நூலக ஆணைக் குழு,
மதுரை மாவட்டம்.

மதுரை.
28, ஜனவரி 1967.

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு நெல்லை நகர் பொது நூலகத்தின் பொன் விழாவும் பொன் விழா மண்டபத் திறப்பு விழாவும் நடத்தவிருப்பது கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நெல்லை நூலக ஆணைக்குழு திரு. சிதம்பரம் பிள்ளையவர்களின் தலைமையில் இதுகாறும் சிறப்பாக நூலகத் தொண்டாற்றியது. உயர்திரு. வீரபாகு அவர்கள் தற்போது தலைவர் பொறுப்பேற்று இருக்கிறார்கள். இவர்களது காலத்திலும் நெல்லைமாவட்டம் நூலகத் தொண்டை மேலும் சிறப்பாக ஆற்றும் என நம்புகிறேன். நெல்லை நகரிலுள்ள பொது நூலகம் தொன்மையானது. அது மேலும் பல்லாண்டு இயங்கி சிறந்த கல்விப் பணியாற்ற வேண்டுமென எனது உளங்கனிந்த வாழ்த்தையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வ. அழகப்பன்.

ஜே. அ. றைட், M. A, M. Ed.,
(முன்னாள் நடு நெல்லை மாவட்ட கல்வி அதிகாரி)
கல்லூரி பேராசிரியர்,
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி,
உரத்தநாடு P. O., தஞ்சை மாவட்டம்.

1st Jan. 1967.

*அன்புடையீர்!*

தங்களது மடல் கிடைக்கப்பெற்றேன். நெல்லை மாநகரின் நடுநாயகமாக விளங்கி, கலங்கரை விளக்காகி அறிவுச்சுடரை இடைவிடாது மக்களினிடையே வீசிவரும் தங்கள் நூலகத்தின் 50-வது ஆண்டு நிறைவு விழா 1967-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் கொண்டாட இருப்பதைக் குறித்து பெருமையும் பூரிப்பும் அடைகின்றேன். இக்கிளை நூலகம் கடந்த பல ஆண்டுகளாக சிறந்த முறையில் தொண்டாற்றி வந்ததை குறிக்கும் வகையில் புதிய கட்டிடத்தின் திறப்பு விழாவும், ஆண்டுவிழா மலர் வெளியிட இருப்பதையும் அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நூலகம் கடந்த காலத்தில் செய்த தொண்டைப்போன்று எதிர்காலத்திலும் சிறந்த முறையில் பணியாற்றும் என நம்புகிறேன். இந்த விழா சிறந்த முறையில் நடைபெற அதற்குரிய ஏற்பாட்டை செய்து வருகின்ற விழாக் குழுவின் தலைவர் திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை, M. A., அவர்கட்கும், காரியதரிசி திரு. சு. கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்கட்கும் ஏனைய அங்கத்தினர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

*உரத்தநாடு*
*1—1—1967*

இங்ஙனம்,

**ஜே. அ. றைட்.**

Sri A. R. KHAN, B. Sc., L. T.
District Educational Officer

Madras North,
MADRAS-7.

**Dated 5—1—1967.**

I am glad to learn that the Golden Jubilee of the Tirunelveli Local Library Authority Public Library, Tirunelveli Town is to be celebrated shortly. I am also glad to learn that a Golden Jubilee New Building will be opened during the Golden Jubilee function. This is a land mark in the progress of the library which I am sure will cater to a larger section of the people in years to come. Associated as I was with the Local Library Authority, Tirunelveli for nearly three years, I am aware of the good work that is being done under the leadership of Sri I. A. Chidambaram Pillai M. A., the Chairman of the Local Library Authority, Tirunelveli who deserves to be congratulated.

I wish the function success and the Local Library Authority, Tirunelveli and its branches many years of useful service.

Yours sincerely,

**A. R. Khan.**

சி. கணபதியா பிள்ளை,
தலைவர்.
பாளையங்கோட்டை நகர மன்றம்.

30—11—'67.

# வாழ்த்துரை

நெல்லை நகர மன்றத்தால் 1917-ல் துவக்கப்பட்டு, 1955 முதல் நெல்லை மாவட்ட நூலக ஆணைக் குழுவால் ஏற்று நடத்தப்பட்டு வரும் நெல்லை நகர் பொது நூலகம் இவ்வாண்டு பொன் விழா கொண்டாடுவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். முன்பு நான் நீண்ட காலமாக நெல்லை நகர மன்ற ஆணையாளராகப் பணியாற்றிய சமயம் இந்நூலக வளர்ச்சிக்காக பல நல்ல காரியங்களைச் செய்ய எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அச்சமயம் இந் நூலகத்திற்குப் பல அரும்பெரும் சிறந்த நூல்களை வாங்கி வழங்கி யுள்ளேன். அந் நூல்கள் மற்றைய நூலகங்களில் காண்பது அரிது. ஆலயங்களுக்கு அடுத்த புனித நிலையில் உள்ளவை நூலகங்கள். நாட்டின் எதிர்காலம் நூலகங்களின் வளர்ச்சியிலும் மக்கள் நூலகப் பணியை பயன்படுத்துவதிலும் இருக்கிறது. நெல்லை நகர் பொது நூலகத்தை பயன்படுத்தி உயர்ந்தவர்கள், அறிஞர்களாகவும் தலைவர்களாகவும் ஆனவர்கள் பல்லாயிரம். கடந்த 50 ஆண்டுகளாக அரும் பெரும் பணிகளைச் சிறந்த முறையில் செய்து இன்று பொன் விழாக் கொண்டாடும் நெல்லை நகர் பொது நூலகம் வருங்காலத்திலும் மேலும் சிறப்பாகப் பணியாற்றி சிறந்த அறிஞர்களையும், தலைவர்களையும் உருவாக்கும் என நம்புகிறேன். நெல்லை நகர் மக்களுக்கும், விழாக் குழுவினர்க்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# நெல்லை மாவட்ட மத்திய நூலகம்,

## பாளையங்கோட்டை.

S. கோமதிநாயகம், M. A.,
மாவட்ட மத்திய நூலகர்.

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் மாவட்ட மத்திய நூலகம் மே, 1952-ல் திறக்கப்பட்டது. இந்நூலகம் பாளையங்கோட்டை திருவனந்தபுரம் ரோட்டில் "அப்பாசாமி – மனோரமா" கட்டிடத்தில் இருக்கிறது.

இந்நூலகத்தில் 15,132 சிறந்த பல்பொருள் நூல்கள் உள்ளன. 1934 உறுப்பினர்கள் இருக்கின்றனர். ஆண்டிற்கு 99,319 பார்வையாளர்கள் இந் நூலகத்தைப் பயன்படுத்துகின்றனர். ஆண்டிற்கு (L + C) 36470 + 21691 நூல்கள் உறுப்பினர்களுக்கும் நூலகத்திற்குள் படிப்பவர்களுக்கும் வழங்கப் படுகிறது.

இந்நூலகத்தில் பெண்கள் குழந்தைகளுக்கென தனிப்பிரிவு இயங்குகிறது. இந்நூலகத்தைச் சுற்றி 8 நூல் வழங்கும் நிலையங்கள் பணியாற்றுகின்றன. இந் நூலகத்திலிருந்து பாளையங்கோட்டை, நெல்லை, மேலப்பாளையம் நகரமன்றப் பகுதியில் உள்ள உறுப்பினர்களின் வீடுகளுக்கு மூன்று சக்கர சைக்கிள் மூலம் நூல்கள் வழங்கப்படுகிறது. மாவட்ட மத்திய நூலகம் விரைவில் பாளையங்கோட்டை கரையாளர் நூலகக் கட்டிடத்திற்கு மாற்றப்படவிருக்கிறது. கரையாளர் நூலகக் கட்டிடத்துடன் இணைத்து, அருகில் உள்ள புறம் போக்கு நிலத்தில் ரூ. 3 லட்சம் செலவில் நவீன வசதியுள்ள மாவட்ட மத்திய நூலகம் & நூலக ஆணைக்குழு அலுவலகக் கட்டிடங்கள் கட்ட நூலக ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

பொதுமக்கள் அனைவரும் மாவட்ட மத்திய நூலகத்தைத் தினமும் பயன் படுத்துவதுடன் ஒவ்வொருவரும் நூலக உறுப்பினராக வேண்டுகிறேன்.

S. NALLAKANNU, B. A., B. T.
Personal Assistant to the
Dist. Educational Officer,
Tirunelvely Central

Palayamcottai

*Dated 12–1–67.*

I am glad to know that the Golden Jubilee Committee of the Tirunelvely Town Local Library Authority Library is bringing out a souvenir on the occasion of the "Golden Jubilee".

I hope the Souvenir will find a wide circulation and will focuss public attention on the great need for taking further steps for the expansion of the library movement in this District.

I wish the function all success.

*S. Nallakannu.*

அகிலன்

171, லாயிட்ஸ் ரோடு,
சென்னை-14.

வணக்கம்.

நூலகப்பணி பணிகளிலெல்லாம் மிகச் சிறந்த பணி. நாட்டுக்குப் புறச் செல்வம் எளிதில் தேடலாம். மனிதர்களாகிய பெரும் செல்வத்தை உருவாக்கும் பணி நூலகத்திற்கு இருக்கிறது. அந்த அரும்பணியைச் செய்து வரும் நெல்லை நகர நூலகம் பொன் விழாக் கொண்டாடி புதுமனை புக இருப்பது கண்டு மகிழ்ச்சியுறுகிறேன். மலர் சிறப்போடு மணம் மிக்கதாக மலர்க! நூலகத்தில் தமிழகத்தின் சிறந்த எழுத்தாளர்களின் சிறந்த நூல்கள் அனைத்தையும் சேர்த்து, அனைவருக்கும் வழங்கி வளர்க! பொன் விழா இனிது நடைபெறவும் நூலகம் மென்மேலும் சிறந்து வளரவும் என் வாழ்த்துக்கள்.

அன்புள்ள,

**அகிலன்,**

தலைவர், தமிழ் எழுத்தாளர் சங்கம்.

**மு. அப்துல் மஜீத்,**
தலைவர்: நகராட்சி மன்றம் &
உறுப்பினர்:
சென்னை மாநில மின் குழு.

வ. உ. சிதம்பரம் கட்டிடம்,
நகர்மன்ற அலுவலகம்,
திருநெல்வேலி.
நாள்: 7—6—1968.

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கிளை நூலகமான நெல்லை நகர் நூலகம் தனது ஐம்பதாண்டு சேவை நிறைவை ஒட்டி பொன்விழாக் கொண்டாடுவதை எண்ணி மிக்க மகிழ்ச்சி யடைகிறேன். வளர்ந்து வரும் ஜனநாயக நாட்டில் நூலகத்தின் சீரிய பங்கைப் பற்றி நான் கூற வேண்டியதில்லை. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. ஆனால் ‘நூலகமில்லா ஊரில் குடியிருத்தல் வேண்டாம்’ — என்ற புதுமொழிக்கிணங்க நெல்லை நகராட்சியினரும் இந் நூலகத்தின் வளர்ச்சியில் பெரிதும் ஆர்வம் கொண்டுள்ளனர். உதாரணமாக இந்நகர் மன்றத்தினர் ரூ. 18,800/– செலவில் புதிய துணைக் கட்டிடம் ஒன்றைக் கட்டி பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் 27—8—67-ல் திறக்கச்செய்து நூலகத்தினர் இன்னும் விரிவான அளவில் சேவை செய்ய வழி வகுத்திருக்கின்றனர்.

நெல்லை மாநகரின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் இந் நூலகம் செழித்து வளர்ந்தோங்க என் உள்ளங்கனிந்த வாழ்த்துக்கள்.

பொன்விழா வைபவம் இனிதே நிறைவு பெறுவதாகுக!

இங்ஙனம்,
அன்பன்,
**மு. அப்துல் மஜீத்**

A. L. சுப்பிரமணியம்,
B. Sc., B. L.,
சட்டமன்ற உறுப்பினர்.

பாளையங்கோட்டை.
26—5—68.

அன்புடையீர்!

தங்களது கடிதம் கிடைக்கப்பெற்றேன். நெல்லை நகர்ப் பொது நூலகம் பொன்விழா கொண்டாட இருப்பது குறித்து மகிழ்ச்சி. கடந்த ஐம்பது ஆண்டு காலமாக இந்த நூலகம் நெல்லைப்பகுதியில் அளவிடற்கரிய சேவையைச் செய்துள்ளது. இன்று நாட்டில் நூலகங்களே அறிவாலயங்களாக உள்ளன. இந்த நூலகத்தின் தொண்டு தொடரும் என்று நம்புகின்றேன். என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

அ. லெ. சுப்பிரமணியம்.

# நூல் நிலையங்கள்

கே. பீர்முகம்மது, பி. எஸ்ஸி.,
ஆணையர், திருநெல்வேலி நகராட்சி.

"நம்ம பையன் சதா வாசகசாலையிலேதான் இருப்பான். எப்பொழுதும் புத்தகமும் கையுந்தான்!" என்று தந்தை பெருமையாகப் பேசுகிருர். அவையத்து முந்தி இருக்க வேண்டும் – தன் மகன், என்று விரும்புபவர், அத்தந்தை.

நூலகத்திற்குச் சென்று பையனைப் பார்ப்போம்; வேகமாகப் பத்திரிகைகளைப் புரட்டுகிருன். "என்ன ஆச்சரியம்! நான் மல அறையில் ஒருவருக்கும் தெரியாமல் கட்டுப்படுத்த இயலாத உணர்ச்சியுடன் கரியால் வரைந்த சித்திரம் அல்லவா, இங்கு அழகுறத் திகழ்கிறது! நம் அபிமான நடிகை பூரண நிர்வாணத்தில், சற்று மாசுபட, நிற்க அதற்கடியில் மண்டியிட்டு அமர்ந்திருக்கும் நம் அன்பு நடிகன் நிமிர்ந்து பார்த்து ரசிக்கிருன்! இதைத் திரையிலே தத்ரூபமாகக் கண்டால் எவ்வளவு இன்பம் பயக்கும். இந்தக் கருத்தோவியத்தைக் கக்கூசுச் சுவற்றில் எழுதி இது தவறென்று யாரும் பார்க்காமல் அழித்து விட்டேனே! இது எத்தகைய புகழ்பெற்ற கருத்து" என்று எண்ணி எண்ணிப் பெருமகிழ்வெய்துகிருன். மாலைவரை காத்திருக்க வேண்டியதில்லை — இக்கோலத்தைத் திரையிற் காண; பகல் காட்சிக்கே போய் விடலாம்' என்ற எண்ண அலைகளுடன் புத்தகப் பகுதிக்கு வருகிருன். கன்னியின் முத்தத்தைச் சுவைத்து முடித்துவிட்டு கனிந்தவளின் சித்தத்தைப் புரட்டுகிருன். எடுத்த எடுப்பிலேயே "உள்ளங்கவர் கள்வன் சுவரேறிக் குதித்துப் படுத்திருக்கும் கனிந்தவளைப் பற்றும் காட்சி" படிக்கப் படிக்க தெவிட்டாத தேனுகிருள் கனிந்தவள்; படத்திற்கு நேரம் ஆகிவிட்டது. புறப்படுகிருன். பையன் பத்திரிகையில் கண்ட புகைப்படமே தன் சித்தம் மகிழ்ந்து எழுதிய சித்திரத்தை ஒத்திருந்தபோது திரையில் நடப்பவை எப்படி அவனைக் கொள்ளை கொண்டிருக்கும்!

மறுநாள் கனிந்தவளின் காதற் கள்வனை அசட்டுக் கணவன் வாள்கொண்டு தாக்கச் சென்றுனே என்ன ஆயிற்று என்ற ஆர்வமோ, அல்லது ஆற்றங்கரையில் நீராடும் பெண்களைப் பார்த்து நின்ற நெடுமாறன் என்ன ஆனுன் என்ற ஏக்கமோ தூண்ட, நூல் நிலையம் திறக்கும் நேரத்தை ஆவலுடன் எதிர்நோக்கி விரைகிருன். மைந்தனின் நூலக ஆர்வத்தைக் கண்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைகிருர் தந்தை.

இத்தகைய நூலகப் படிப்பால் விளையும் பயனை இன்றைய சமுதாயத்தில் பார்க்கிறோம். "மக்கள் மனக்கோட்டம் அகற்றும் நூல்" என்று புத்தகங்களுக்கு இலக்கணம் வகுத்தார்கள். ஆனுல் நாம் மேலே பார்த்தவை, மனத்தை அழுக்குப்

படுத்திப் படுகுழியில் வீழ்த்துகின்றன. விற்பனை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட பத்திரிகை வகைகளும் புத்தகங்களும் இவ்விலக்கணத்திற்கு மாறாக மக்கள் சமுதாயத்தில் கயமையையே வளர்க்கின்றன.

கயவர் என்றவர், மனிதர்கள் போல் உரு அமைந்த ஒரு பிராணி என்றார் வள்ளுவர். விலங்குகளுடன் ஒப்பிடக்கூட அவர் விரும்பவில்லை. "மக்களே போலவர் கயவர்" என்றார். அவ்வாறே இக்காகிதக்கட்டுகளும் கக்கூஸ் சித்திரங்களும் நூலெனக் கருதப்படக்கூடாதவை. இவை புலன் இச்சைகளைக் கட்டவிழ்த்து விட்டு கீழ்த்தர நோக்கங்களைத் தூண்டுவதால் பெரும்பான்மையோர் விரும்புகிறார்கள். நல்ல விற்பனையாகின்ற இவை அதம நூல்கள் எனப்படலாம். இவற்றால் இச்சைக்கேற்ப அனுபவிக்க அவாவுற்று நன்று தீதறியாமல் வீழ்ந்து வெளிப்படையாக அவமானமும் உடல்நோயும் பெறுவதுடன் உள் ஆத்மாவும் ஈனமுறும்.

இரண்டாம் வகையான நூல்கள் அறிவை வளர்ப்பன. உலக வாழ்க்கைக்கு பயன்படும் வகையில் புறஅறிவைப் போதிப்பன. தொழில் முறைகள், வியாபாரம், இயந்திரங்கள் முதலியன பற்றிய ஞானத்தைத் தருபவை விஞ்ஞானம், பூ இயல், இரசாயனம் போன்ற அறிவு நூல்கள், காமசாஸ்திரங்களும் கூடத்தான். இவை புலன் இச்சைகளைத் தொல்லையின்றி அனுபவித்து வாழ வழி செய்யும் புறஅறிவு நூல்கள். இவை மனித வாழ்க்கைக்குத் தேவையானவை. முதற்கூறிய அதமநூல்களில் ஈடுபட்டோருக்கு இவற்றைப் படிக்கும் எண்ணம் வருதல் அரிது.

மூன்றும் வகையான நூல்கள் ஆத்மசக்தியை வளர்க்கும் நூல்கள். இவை தியாகத்தையும் தன்னலமற்ற சேவையையும் வளர்ப்பன. புலனடக்கத்தைப் போதித்து ஆத்மசுத்தி பெற்று மெஞ்ஞானத்தை அடையச் செய்வன. தாமரை இலைமேல் நீர் போல பட்டும் படாமலும் உலக வாழ்வில் ஈடுபட்டு மோன நிலையை அடைந்து என்றென்றும் நித்தியானந்தத்தில் இருக்கச் செய்பவை. இவை உத்தம நூல்கள். நவில்தொறும் நவில்தொறும் நயம் தோன்றி மக்கள் மனக்கொட்டத்தை அகற்றுபவை. முன் கூறப்பட்ட அதம நூல்களைக் கட்டுப்படுத்துவதனால்தான் அடுத்த இருவகை நூல்களை அதிகமான மக்கள் படித்துப் பயன் பெறுவர்.

# வாழ்த்துரை

ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை, M. A., M. L. A.,
தலைவர், பொன் விழாக்குழு.

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவராக நீண்ட காலம் பணியாற்ற எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. எனது பணி காலத்தில் நெல்லை நகர் நூலகம் படிப்படியாக அதிக அளவு வளர்ச்சியடைந்ததைக் கண்டேன். இந்நூலக விழாக்களில் கலந்துகொள்ள எனக்குப் பல முறை வாய்ப்புகள் கிடைத்தன. அவ்விழாக்களில் பொதுமக்கள் காட்டிய ஊக்கமும், ஆர்வமும், அளித்த உதவியும் ஒத்துழைப்பும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. நெல்லை மாவட்டத்தில் சிறந்த நூலகமாக நெல்லை நகர் நூலகம் தேர்ந்தெடுக்கப்பட்டு 1965-ல் தமிழக முதலமைச்சரால் இந்நூலகத்திற்கு வெள்ளிக் கேடயம் பரிசளிக்கப்பட்டுள்ளது.

பொன் விழா சிறப்புடன் நடைபெறவும், பொன்விழா மலர் வெளி வரவும், உதவியும் ஒத்துழைப்பும் அளித்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல பொது நிறுவனங்களின் தலைவரும், ஊக்கமும், ஆர்வமும் மிக்க செயல் வீரருமான உயர்திரு. A. P. C. வீரபாகு அவர்கள் தலைமையில் நெல்லை மாவட்ட நூலக ஆணைக் குழு திறம்பட சிறப்புடன் பணியாற்றி வருகிறது.

நெல்லை நகர் பொது நூலகத்தைப் பொதுமக்கள் மேன்மேலும் நன்கு பயன்படுத்தித் தமிழ் நாட்டில் தலைசிறந்த நூலகமாகத் திகழ உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டுகிறேன்.

கடந்த 50 ஆண்டுகளாகச் சிறந்த முறையில் அரும் பெரும் பணிகளையாற்றியுள்ள இந்நூலகத்தையும், நூலகப் பணியாளர்களையும் நெல்லை மக்களையும் பாராட்டுகிறேன்.

**வளர்க நெல்லை நகர் நூலகம்!**

**உயர்க நெல்லை மக்கள்!!**

என வாழ்த்துகிறேன்.

# நன்றியுரை.

**S. கல்யாணசுந்தரம் பிள்ளை,**
செயலாளர், பொன் விழாக்குழு &
அதிபர், சென்ட்ரல் தியேட்டர் & S. K. பிக்சர்ஸ் etc.

முன்பு நெல்லை நகர் பொது நூலகத்தின் விழாக்களில் பலமுறை கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியதுண்டு. இம்முறை இந் நூலகத்தின் பொன் விழாக் குழுச் செயலாளராகப் பணியாற்றும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்திருக்கிறது.

இப் பொன் விழாவின் மூலம் கடந்த 50 ஆண்டுகளாக இந் நூலகம் மக்களுக்கு ஆற்றிய பணியை, மக்களுக்கு நன்கு உணர்த்த வாய்ப்பும், எதிர்காலத்தில் இந் நூலகத்தை மக்கள் நன்கு பயன்படுத்தித் தங்களையும் இந்நாட்டையும் உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற நோக்கமும் ஏற்படுமென நம்புகிறேன்.

பொன் விழா சிறப்புடன் நடைபெறவும், பொன் விழா மலர் வெளிவரவும், விளம்பரங்கள் அளித்தும், நன்கொடைகள் வழங்கியும் வாழ்த்துக்கள், கட்டுரைகள், கவிதைகள் வழங்கியும், விழாவில் கலந்து சிறப்பித்தும், உதவியும் ஒத்துழைப்பும் நல்கியுமுள்ள அனைவருக்கும் எனது நன்றியையும் பொன் விழாக் குழுவின் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

# தமிழ் நாட்டில் நூலக இயக்க வளர்ச்சியும் தேவையும்

உயர்திரு. A. P. C. வீரபாகு, B. A, அவர்கள்,
தலைவர், நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு.

இந்தியாவில் முதன் முதல் பொது நூலகச் சட்டத்தை அமுலாக்கிய பெருமை நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுவையே சாரும். சென்னை அரசு, இந்தியாவில் முதன் முதலாக 1948ம் ஆண்டு சென்னை பொது நூலகச் சட்டத்தை இயற்றியது. இச் சட்டம் 1950-ல் அமுலாக்கப்பட்டது. இச் சட்டத்தை தமிழ் நாட்டில் நெல்லை மாவட்டம் முதன் முதலாக அமுலாக்கியது.

சென்னை பொது நூலகச் சட்டம் அமுலாக்கப்பட்டு பதினாறு ஆண்டுகளுக்கு மேலாகிறது. இப்பதினாறு ஆண்டுகளில் நகரங்கள் முதல் பெரிய கிராமங்கள் வரை நூலகங்கள் திறக்கப்பட்டு ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி, தமிழக அரசு அளித்த இலவசக் கல்வியைப் போல், இலவச நூலகப் பணியும் சிறந்த முறையில் கற்றறிந்தவர்கள் அனைவருக்கும் கிடைக்கிறது. சிறிய கிராமங்களுக்குக் கூட நூல் வழங்கும் நிலையங்கள் மூலம் நூலகப் பணி கிடைக்கிறது. மக்களுக்கு கல்வி அறிவை இலவசமாகப் அளித்ததுடனில்லாது, அவ்வறிவை வளர்க்கவும், பொது அறிவைப் பெருக்கவும், மக்களின் சிந்தனா சக்தியைத் தூண்டவும், பல்துறையிலும் மக்களின் செயல் திறனை வளர்க்கவும் தமிழக அரசு திட்டமிட்டுச் செயலாக்கிய நூலக இயக்கம் பூரணமான நல்ல பலனை அளித்துள்ளது. இத்திட்டத்தால் அனைவருக்கும் சிறந்த, உயர்ந்த பல்பொருள் நூல்களையும், பத்திரிக்கைகளையும் எளிதில் இலவசமாக படிக்கவும், அறிவை வளர்க்கவும், பயனடையவும் வாய்ப்புகள் கிடைத்தன. தமிழ் நாட்டில் பொது நூலகங்களைப் பயன்படுத்தி அறிஞர்களானவர்கள், பயனடைந்து உயர்ந்தவர்கள் தொகை பல லட்சம். எதிர் காலத்தில் இப்பொது நூலகங்களைப் பயன்படுத்தி பயனடைய விரும்பவர்கள் தொகை பல கோடிக்கு உயரும்.

"நூலகங்களின் வளர்ச்சியே மக்களின் வளர்ச்சி
மக்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி"

நூலகம் மக்களின் அறிவுச் செல்வத்தை, சிந்தனையை, நற்பண்பை, செயல் திறத்தை வளர்க்கிறது. பின் இவை நாட்டின் பொருள் வளத்தை, தொழில் வளத்தை, நற்பண்புகளுள்ள சமுதாயத்தை உருவாக்குகின்றன. நாட்டின் சிறந்த எதிர்காலம் நூலகங்களின் கையிலிருக்கிறது. நூலகங்களைப் பயன்படுத்தி பயனடையவேண்டும் என்ற நோக்கமும், ஆர்வமும், அறிவுப் பசியும் மக்களிடையே

வளர்ந்து வருகின்றன. அதிக அளவு சிறந்த பல்துறை நூல்களையும், பத்திரிக்கைகளையும், வசதியுள்ள நூலகக் கட்டிடங்களையும் பொது மக்கள் பெரிதும் விரும்புவதுடன், வேண்டவும் செய்கின்றனர். ஆனால் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் பொது மக்களின் தேவைகளைப் பூரணமாகப் பூர்த்தி செய்ய இயலாது, வளர்ச்சியில் தடை ஏற்படுகிறது. நூலக இயக்கத்திற்குத் தேவைக்கேற்ப நிதி வழங்கி, நூலக இயக்கத்தை வளர்ச்சியடையச் செய்ய நூலக ஆணைக் குழுக்களும் அரசாங்கமும் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் வளர்ச்சியும் தேவைகளும்:-**

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு தனது குறைந்த வருவாயில் அதிக அளவு நூலகங்களைத் திறமையாகவும் சிறப்பாகவும் இயக்கி வருகிறது. தற்பொழுது 104 நூலகங்களும் 26 நூல் வழங்கும் நிலையங்களும் சிறப்பாக பணியாற்றி வருகின்றன. இவ்வாண்டு மேலும் 6 நூலகங்கள் திறக்கப்பட விருக்கின்றன. பெண்களுக்கென்று ஒரு நூலகமும், குழந்தைகளுக்கென ஒரு தனி நூலகமும் திறக்கப்பட்டுள்ளன. நூலக வரி மூலம் ஆண்டிற்கு சுமார் ரூபாய் ஒரு லட்சமும் அரசாங்க மான்யம் மூலம் ரூபாய் ஒரு லட்சமும் கிடைக்கிறது. ரூபாய் மூன்று லட்சம் செலவில் மாவட்ட மத்திய நூலகக் கட்டிடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. சுழலும் நூலகக் கார் வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் நூலகங்களைப் பயன் படுத்துபவர்கள் தொகையும், நூலக உறுப்பினர்கள் தொகையும் வெகுவாக உயர்ந்துள்ளது. மக்களின் தேவைகளும், நூலக ஆணைக்குழுவின் நிர்வாகச் செலவுகளும் அதிகம் உயர்ந் துள்ளது. பொதுமக்கள் அதிக அளவு பலதரப்பட்ட பத்திரிக்கைகளையும் விலை உயர்ந்த சிறந்த பல் பொருள் நூல்களையும் வேண்டுகின்றனர். அதிக அளவு புதிய நூல்களை வழங்க வேண்டுகின்றனர். நவீன வசதியுள்ள நூலகக் கட்டிடங்களை வேண்டுகின்றனர். நூல்கள் வீட்டு வாயிலிலேயே நூலகக் கார்கள் மூலம் கிடைக்க வேண்டுமென விரும்புகின்றனர். தேவைகள் பெருகியுள்ளன. நூலகங் களின் எண்ணிக்கையும், நூலகங்களைப் பயன் படுத்துபவர்கள் தொகையும் பெருகி யுள்ளன. ஊழியர்கள் எண்ணிக்கை, ஊதியச் செலவு, நூல்களின் விலைகள், பத்திரிக்கைகளின் விலை, கட்டிட வாடகை, இதரச் செலவுகள் முதலியவை பல மடங்காக உயர்ந்துள்ளன. ஆனால் நூலக வரி உயரவில்லை. அரசாங்க மான்யத் தின் அளவும் உயரவில்லை, மக்களின் இன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்து, எதிர் காலத் தேவைகளுக்கேற்ப திட்டங்களைத் தயாரித்து அமுலாக்காவிட்டால் நூலக இயக்கவளர்ச்சியும், நாட்டின் எதிர்காலமும் பாதிக்கப்படும்.

நெல்லை மாவட்டத்தில் தேவைப்படும் இடங்களிலெல்லாம் நூலகங்கள் திறக்கவும், திறக்கப்பட்ட நூலகங்களுக்கு, மக்கள் தேவைக்கு ஏற்ப அதிக அளவு நூல்கள், பத்திரிக்கைகள், தளவாடச் சாமன்கள் வழங்கவும் நவீன வசதியுள்ள நூலகக் கட்டிடங்கள் கட்டவும் நூலகங்களில் செய்திப்பட வசதி செய்யவும், சுழலும் நூலகக் கார்கள் மூலம் உறுப்பினர்கள் வீடுகளுக்கு நூல்கள் வழங்கவும் மற்றும் பல திட்டங்களை அமுலாக்கவும் போதிய நிதி வசதியில்லாதிருக்கிறது.

**தமிழக நூலக ஆணைக்குழுக்கள்:-**

தமிழ் நாட்டில் ஒரு சில நூலக ஆணைக்குழுக்களுக்கு தேவைக்கேற்ப வருவாய் உள்ளது. அவை அதிக அளவு நூலகங்கள் திறந்து அதிக அளவு நூல்கள் வழங்கி, நூலகக் கட்டிடங்கள் கட்டி சுழலும் நூலகத் திட்டத்தை அமுலாக்கி யுள்ளன. வருவாய் குறைந்த மாவட்டங்கள், தேவைப்படும் இடங்களில்லெல்லாம் நூலகங்கள் திறக்க முடியாமலும் மக்கள் வேண்டும் அளவு அதிகம் புதிய நூல்கள் வழங்க முடியாமலும், நூலகக் கட்டிடங்கள் கட்ட முடியாமலும் பல முன்னேற்றத் திட்டங்களை அமுலாக்க முடியாமலும் இருக்கின்றன. ஆனால் தமிழ் நாட்டில் நூலக இயக்க வளர்ச்சியைக் கவனிப்பவர்கள் வருவாய் மிகுந்த மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கண்டு அம்மாவட்டத்தை மட்டும் பாராட்டு கின்றனர். மற்றைய மாவட்டங்கள் வளர்ச்சியில் முன்னணியில் இல்லாததற்கு நிதி வருவாய்க் குறைவே காரணம். நூலக இயக்கம் தமிழ் நாட்டில் ஒரே சீராக வளர்ச்சி யடைய வேண்டும். அதுதான் உண்மையான வளர்ச்சி. நிதி வசதிமிக்க மாவட்டங்கள் முன்னணியிலும், நிதிவசதி குறைந்தவை பின் தங்கிய நிலையிலும் உள்ள குறையை உடன் நிவிர்த்தி செய்ய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 1948-ம் ஆண்டு நிலையும், 1967-ம் ஆண்டு நிலையும்.

குழந்தை பிறந்த சமயம் அளிக்கும் உணவின் தன்மையும் அளவும் குழந்தை வளர, வளர கூட்டப்படுகிறது. 1948-ம் ஆண்டு சென்னை பொது நூலகச் சட்டம் இயற்றப்பட்டு அமுலாக்கப்பட்ட சமயம் இருந்த நூலகங்கள், நூல்கள், பணியாளர் கள், ஊதிய விகிதம், நூல்கள், பத்திரிக்கைகள், தளவாடச் சாமான்கள், நூலகங்களைப் பயன்படுத்துபவர்கள், உறுப்பினர்கள் தொகை, கட்டிட வாடகைகள், இதரச் செலவுகள் முதலியவை எண்ணிக்கையிலும், விலையிலும் பலமடங்காக உயர்ந்துள்ளது. ஆனால் நூலக வரியும், அரசாங்க மான்யமும், 1948ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. ஸ்தல ஸ்தாபனங்களின் வீட்டு வரிகள் சொத்துக்கள் உயர்வு காரணமாக நூலக வரி வருவாய் சிறிது உயர்ந்துள்ளது 1948-ம் ஆண்டு இருந்த நிலையையும் இப்பொழுது பல மடங்காக உயர்ந்துள்ள நூலகங்களின் எண்ணிக்கையையும், செலவுகளையும், பல லட்சமாக உயர்ந்துள்ள பார்வையாளர்களையும், உறுப்பினர்களையும், தேவைகளையும், எதிர்கால நலன் களையும் கருத்தில் கொண்டு நூலக வரியை உயர்த்தி, தேவைக்கேற்ப அரசு மான்யம் வழங்கி, தமிழ் நாட்டில் நூலக இயக்கம் ஒரே சீராக வளர்ச்சியடைய அரசும், நூலக ஆணைக்குழுக்களும் முயற்சிக்க வேண்டும். நிதி வசதியை பெருக்குவதின் மூலம் நூலக ஆணைக் குழுக்களின் பணி மென்மேலும் வளர்ச்சி யடைந்து நாட்டின் எதிர்காலத்தை வளமுள்ளதாக்கும்.

பழுதடைந்த நூல்களைப் பைண்டிங் செய்வதில் பழைய நடைமுறைகள் காரணமாக நூலகங்களில் தேங்கியுள்ள பல ஆயிரம் நூல்களைப் பைண்டிங் செய்வதில் நீண்ட காலதாமதம் ஏற்படுகிறது. இதனால், ஏற்கனவே தேவைக் கேற்ப புதிய நூல்களை வழங்க முடியாத நிலையில் உள்ள நூலக ஆணைக் குழு

பழுதடைந்த நல்ல நூல்களையும் பைண்டிங் செய்து உறுப்பினர்களுக்கும் வாசகர்களுக்கும் வழங்க முடியாத பரிதாபகரமான நிலை ஏற்படுகிறது. எழுது பொருள்கள் வாங்குதல், பதிவேடுகள், நமூனுக்கள் அச்சிடுதல் போன்றவைகளிலும் இது போன்ற பழைய நடைமுறைகளால் நிர்வாகம் பாதிக்கப்படுகிறது.

## நூலகப் பணியாளர்கள் :

நாட்டின் உயிர்நாடி போன்றவை பொது நூலகங்கள். நூலக இயக்க வளர்ச்சிக்கு அரசாங்கமும், நூலக ஆணைக் குழுக்களும் அமுலாக்கும் திட்டங்களை வெற்றியடையச் செய்வது நூலகப் பணியாளர்களின் பொறுப்பும் கடமையும் ஆகும். நூலகப் பணியாளர்களுக்கு மற்றைய அரசாங்கப் பணியாளர்களை விட வசதியும் வாய்ப்பும் அளிக்கப்பட வேண்டும். ஆனல் இன்று நூலகப் பணியாளர்களுக்கு அரசாங்கப் பணியாளர்களுக்கொப்ப வசதியும் வாய்ப்பும் அளிக்கப் படவில்லை.

தமிழ்நாட்டில் பொது நூலகங்களின் வளர்ச்சியையும் தேவைகளையும், எதிர்கால நலத்தையும் கருத்தில் கொண்டு கீழ்கண்ட திட்டங்களை அமுலாக்கி, தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(1) நூலக வரியை உயர்த்துதல்

(2) அரசாங்க மான்யத்தை தேவைக்கேற்ப அதிகம் அளித்தல்

(3) சுழலும் நூலகக் கார்களும், செய்திப்படச் சாதனங்களும் வழங்குதல்.

(4) நவீன நூலகக் கட்டிடங்கள் கட்ட நிதி வசதி அளித்தல்.

(5) நூலகப் பணியாளர்களை அரசாங்கப் பணியாளர்களுக்குச் சமமாகக் கருதுவதுடன், பென்ஷன் வசதி, பல்கலைக்கழகத் தேர்வுகளில் தனிப்பட்ட முறையில் நேரடியாகக் கலந்து கொள்ள வாய்ப்பு, நீண்ட காலப் பணியும் திறமையும் உள்ளவர்கள் பதவி உயர்வு பெற வாய்ப்பு முதலிய வசதிகள் செய்தல்.

(6) நூல்கள் பைண்டிங், பதிவேடுகள், நமூனுக்கள் அச்சிடுதல், எழுது பொருள்கள், மற்றும் அவசியப் பொருள்கள் வாங்குதல் முதலியவற்றில் ஸ்தல மார்க்கெட்டில் டெண்டர் பெற்று உடன் செய்ய அனுமதியளித்தல்.

(7) வசூலித்த நூலக வரியைக் கட்டாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க நூலகச் சட்டத்தில் வழி வகை செய்தல்.

**வாழ்க தமிழ்! வளர்க நூலக இயக்கம்!!**
**பெருகுக அறிவுச் செல்வம்!!!**

# வையம் வாழ

நெ. து. சுந்தர வடிவேலு

பெறற்கரியது மானிடப் பிறவி. அவ்வரிய பிறவி நமக்குக் கிட்டியுள்ளது. இப்பிறவியை நன்முறையில் நடத்த வேண்டும். இதற்கு மனித உரு மட்டும் போதாது. மனித இயல்புகள் வளர வேண்டும்; மலர வேண்டும். அவற்றின் துணை கொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும்.

மனித நல்லியல்புகளை வளர்க்கும் வகை என்ன? அறிவு பெறுதல், வகை யாகும். அறிவு பெறும் வழி எது? கற்றல் அறிவு பெறும் வழி.

செல்வத்துள் எல்லாம் சிறந்த செல்வமாகிய அறிவுச் செல்வத்தை, எவ்வளவு கல்வியால் பெறலாம்? தொடக்கக்கல்வி கொடுத்துவிடுமா, அறிவுச் செல்வத்தை? கொடாது. உயர்நிலைப்பள்ளிப் படிப்பு கொடுத்துவிடுமா, அறிவுச் செல்வம் அனைத்தையும்? கொடாது. கல்லூரிக் கல்வியும் அறிவுச் செல்வம் அவ்வளவையும் அடக்கிவிடாது.

அறிவு எல்லையற்றது. அது, வளர்ந்து கொண்டே இருப்பது; புதுப்புதுக் கோலம் கொள்வது, அதைப்பெற — போதிய அளவு பெற — காலமெல்லாம் கற்க வேண்டும்; இளமையிலும் கற்க வேண்டும். வாலிபத்திலும் கற்க வேண்டும். முதுமையிலும் கற்க வேண்டும். தொடக்கப் பள்ளியில் தொடங்கிய கல்வி, வீடு வரை தொடர வேண்டும். கல்வி நிலையத்தில் சேர்ந்திராத போதும், தாமே கற்று அறிவு பெறவேண்டும்.

தாமே கற்பது எதை? கண்டதைக் கற்கலாமா? ஆகாது. பின் எவற்றைக் கற்க? ஆளாக்கும் நூல்களைக் கற்க. தன்னம்பிக்கை யூட்டும் நூல்களைக் கற்க. தன்னூக்கம் வளர்க்கும் நூல்களைக் கற்க. தன் முயற்சிக்கு ஊக்கும் நூல்களைக் கற்க. இவற்றின் மூலம் ஆண்மை தரும் கல்வியைப் பெறுக.

ஆண்மை தரும் கல்வி, ஆற்றல் தரும் கல்வியாக இருத்தல் மட்டும் போதாது. வானமளந்ததனைத்தும் அளந்திடும் அறிவு தரும் கல்வியாகவும் இருத்தல் வேண்டும். வானிலும் விரிந்து, கடலினும் பரந்து வளரும் அறிவுத் துறையின் அடி முடிகளைக் காட்டும் நூல்களைக் கற்கவேண்டும். அறிவு ஊற்றுகளாகத் தொடங்கும் மக்கள் அறிவுத் தேக்கங்களாக, அறிவுக் கடல்களாக வளர வேண்டும்.

அறிவுப் பெருக்கின் பண்பு என்ன? ஈரமே மெய்யறிவின் பண்பு. 'பிறிதினேய் தன்னேய் போல் நோக்கும்' பண்பு, படர்ந்து கலந்து தழைக்க

வேண்டும். ஈரத்தை வளர்க்கும் நூல்களை, ஒருமைப்பாட்டினை உணர்த்தும் நூல்களை, மானிடத்தைப் போற்றும் நூல்களை, நல்லோர் மேற்கொண்ட நன்னெறி காட்டி, நல்வழி காட்டும் நூல்களை நிறையக் கற்க வேண்டும்.

இத்தகைய நூல்களை எல்லாம் கற்று, உருவத்தால் மனிதர்களாகப் பிறந்தோர் உள்ளத்தால் மனிதர்களாக, சொல்லால் மனிதர்களாக, நற்செயல்களால் மனிதர்களாக, வளர்ந்து, சிறந்து, வாழவேண்டும்.

ஒவ்வொருவரும், தனக்குத் தனக்கு ஒரு நூல் நிலையத்தை, பல துறை நூல்கள் கொண்ட நூல் நிலையத்தை அமைத்துக் கொள்ள இயலாது. பொது நூலகங்கள் பொதுமக்களின் தொடர் கல்விக்கு, தற்படிப்பிற்குத் துணை செய்ய வேண்டும். கல்விக் கூடங்கள் எவ்வளவு இன்றியமையாதனவோ, அவ்வளவு இன்றியமையாதன, நூலகங்களும்.

